**8508**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் — இரண்டாம் தாள்

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

ii) முகவுரை, பொருளுரை மற்றும் முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. 1 × 10 =10

1. குருவிப்பட்டி பாலமும் பொன்னம்பலமும்.
2. கார்த்திகேயனின் பண்பு நலன்கள்.
3. வேலை(ளை) வந்துவிட்டது - இக்கதை தலைப்பின் பொருத்தத்தை விளக்குக.

II. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. 1 × 10 = 10

(*குறிப்பு :* கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ பதிவு எண்ணோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. நும் குடியிருப்புப் பகுதியில் உள்ள பழுதுபட்ட சாலைகளைச் சீரமைக்க வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
5. நீ கண்டு களித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
6. நீங்கள் வாழும் பகுதியில் ஒரு புதிய அஞ்சல் பெட்டி அமைத்துத் தருமாறு தலைமை அஞ்சலகத் தலைவருக்கு வேண்டுகோள் கடிதம் ஒன்று எழுதுக.

III. 7. கீழ்க்காணும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. 5 × 2 = 10

திறப்பதென்றால் மனக்கதவைத் திறக்க வேண்டும்
தேய்ப்பதென்றால் கொடுமைகளைத் தேய்க்க வேண்டும்
துறப்பதென்றால் தீமைகளைத் துறக்க வேண்டும்
தொலைப்பதென்றால் பீடைகளைத் தொலைக்க வேண்டும்
மறப்பதென்றால் சூழ்ச்சி செய்ய மறக்க வேண்டும்
மடிவதென்றால் சோம்பல்தான் மடிய வேண்டும்
பறப்பதென்றால் அறியாமை பறக்க வேண்டும்
படிப்பதென்றால் வள்ளுவரைப் படிக்க வேண்டும்.

*வினாக்கள் :*

i) எதனைத் திறக்க வேண்டும் ?

ii) துறக்க வேண்டுவன எவை ?

iii) எது மடிய வேண்டும் ?

iv) எது பறக்க வேண்டும் ?

v) எதனைப் படிக்க வேண்டும் ?

[ Turn over

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச்* சுருக்கி எழுதுக : $1 \times 10 = 10$

நம்முடைய நாட்டின்கண் பழைய காலத்தில் கல்வி வளர்ச்சி அடைவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்கள் புலவர்கள். அவர்களுடைய வாழ்க்கைக்குரிய சாதனங்களை வழங்கி, அவர்களுக்கு ஊக்கமளித்து வந்தவர்கள் மன்னர்களும், ஜமீன்தார்களும், பிரபுக்களும் ஆவார்கள். இந்நாட்டில் இருந்த சேர சோழ பாண்டியர்களும் குறுநில மன்னர்களும் தங்கள் தங்கள் ஆஸ்தானங்களிற் பல புலவர்களைக் கூட்டி ஆதரித்து, அப்புலவர்களால் தமிழ் நூற்பெருக்கமும் தம் புகழ் வளர்ச்சியும் உண்டாகச் செய்தனர். புலவராற் புகழப் பெறுதலையே சிறந்த மதிப்பாகக் கருதினர். புலவராற் பாடப்பெறாவிடின் அது வாழ்க்கைப் பயனை இழந்தது போலாகும் என்றே அவர்கள் எண்ணினர். சென்ற நூற்றாண்டு வரையில் ஜமீன்தார்கள் தமிழ்க்கவிஞர்களை நன்கு ஆதரித்து வந்தனர். சில மடாதிபதிகளும் அங்ஙனமே செய்தனர்.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. அன்பின் ஐந்திணைகள் யாவை ? $1 \times 2 = 2$

*அல்லது*

சிறுபொழுது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

10. தும்பைத்திணையாவது யாது ? $1 \times 2 = 2$

*அல்லது*

பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

11. நேரிசையாசிரியப்பாவின் இலக்கணம் எழுதுக. $1 \times 2 = 2$

*அல்லது*

வெண்பாவின் வகைகள் யாவை ?

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : $1 \times 2 = 2$

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்

புணரின் வெகுளாமை நன்று.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** பகுபத உறுப்பிலக்கணம் தருக : $2 \times 2 = 4$

i) கொண்ட ii) எய்தார்

iii) மகிழ்ந்தனர் iv) போற்றுதும்.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) நீர்வேலி ii) ஒருதனி

iii) விரிமழை iv) தவச்சிறிது.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: 2 × 2 = 4

i) வடகிழக்கு ii) காலங்கடந்தது

iii) செந்தமிழ் iv) நாடெல்லாம்.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்குத்** தொழிற்பெயர் எழுதுக : 1 × 2 = 2

i) தொழுதார் ii) வாழ்வார்.

17. தற்குறிப்பேற்ற அணியை உதாரணம் தந்து விளக்கி எழுதுக. 1 × 4 = 4

*அல்லது*

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு

நிலத்தறைந்தான் கைபிழையா தற்று - இக்குறளில் பயின்றுள்ள அணியைச் சுட்டி விளக்குக.

18. கீழ்க்காண்பவற்றில் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : 1 × 2 = 2

பெயரெச்ச வாய்பாடுகள் யாவை ?

*அல்லது*

இனமொழி விடை என்றால் என்ன ?

19. கீழ்க்காண்பவற்றில் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : 1 × 2 = 2

தனிமொழி என்பது யாது ?

*அல்லது*

உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று விளக்குக.

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : 1 × 2 = 2

அடடா இசை கேளாத செவிகளா இவை இசை நுகராத செவிகட்கு என்பாடல் இனிக்காதே சரி இருக்கட்டும்

21. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டனுக்கு** திருந்திய சொற்களை எழுதுக : 2 × 1 = 2

i) முழித்தான் ii) துளிர்

iii) கண்ணாலம் iv) தோப்பனார்.

22. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டினைப்** பிரித்து எழுதுக : 2 × 1 = 2

i) நல்வினை ii) உலகளித்தலான்

iii) கொண்டேத்தும் iv) நண்ணுவதில்லை.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக : 3 × 2 = 6

i) தாயைக் கன்ட சேயைப் போள

ii) நேற்று மளை பெய்தது

iii) கினறு ஆளமாக உள்ளது.

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : 2 × 1 = 2

i) அபிஷேகம் ii) விஷயம்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : 1 × 2 = 2

காமராசரை அறியாதவரும் உண்டோ ?

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்குக : 1 × 2 = 2

மடுவை மலையாக்கி கதை கட்டுவது மக்கள் இயல்பு தானே ! நமக்கு தெரியாதா என்ன ? பொருளுக்கு பாடாத புலவர் இந்த் பூவுலகில் உண்டா ?

27. கீழ்க்காணும் தொடரை வினாத்தொடராக மாற்றுக : 1 × 2 = 2

கலைவளமும் கல்வி வளமும் மலை வளமும் நில வளமும் நிரம்பியது திருநெல்வேலிச் சீமை.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : 1 × 4 = 4

**Fashion usually means change of dress. Fashions keep changing what is considered out of fashion to-day will become a new fashion tomorrow. Fashions repeat. But Gandhiji never changed his simple style.**

29. கீழ்க்காணும் மரபுத்தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் **மூன்றனைத்** தமிழில் மொழிபெயர்க்க : 3 × 2 = 6

i) **Look before you leap**

ii) **Honesty is the best policy**

iii) **Self help is the best help**

iv) **He robs Peter to pull Paul**

v) **Truth always triumphs.**